ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா₃ந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா₃ ஹ்ருதி₃ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ தொடர்சங்கிலிகை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தொடர்சங்கிலிகை ॥

## தளர்நடைப் பருவம்

‡தொடர் சங்கிலிகை சலார் பிலார் என்னத்⋆
    தூங்கு பொன்மணி ஒலிப்ப⋆
படு மும்மதப் புனல் சோர வாரணம்
    பைய⋆ நின்றூர்வது போல்⋆
உடன் கூடிக் கிண்கிணி ஆரவாரிப்ப⋆
    உடை மணி பறை கறங்க⋆
தடந் தாளிணை கொண்டு சார்ங்கபாணி⋆
    தளர்நடை நடவானோ (1)

செக்கரிடை நுனிக் கொம்பில் தோன்றும்⋆
    சிறுபிறை முளைப் போல்⋆
நக்க செந் துவர்வாய்த் திண்ணை மீதே⋆
    நளிர் வெண்பல் முளை இலக⋆
அக்குவடம் உடுத்தாமைத்தாலி
    பூண்ட⋆ அனந்தசயனன்⋆
தக்க மா மணிவண்ணன் வாசுதேவன்⋆
    தளர்நடை நடவானோ (2)

மின்னுக் கொடியும் ஓர் வெண் திங்களும்⋆
    சூழ் பரிவேடமுமாய்ப்⋆
பின்னல் துலங்கும் அரசிலையும்⋆
    பீதகச் சிற்றாடை யொடும்⋆
மின்னில் பொலிந்ததோர் கார்முகில் போலக்⋆
    கழுத்தினில் காறையொடும்⋆
தன்னில் பொலிந்த இருடீகேசன்⋆
    தளர்நடை நடவானோ (3)

கன்னல் குடம் திறந்தால் ஒத்தூறிக்⋆
கணகண சிரித்துவந்து⋆
முன் வந்து நின்று முத்தம் தரும்⋆ என்
முகில்வண்ணந் திருமார்வன்⋆
தன்னைப் பெற்றேற்குத் தன்வாய் அமுதம்
தந்து⋆ என்னைத் தளிர்ப்பிக்கின்றான்⋆
தன் எற்று மாற்றலர் தலைகள் மீதே⋆
தளர்நடை நடவானோ (4)

முன்னல் ஓர் வெள்ளிப் பெருமலைக் குட்டன்⋆
மொடு மொடு விரைந்தோடப்⋆
பின்னைத் தொடர்ந்ததோர் கருமலைக் குட்டன்⋆
பெயர்ந்தடியிடுவது போல்⋆
பன்னி உலகம் பரவி ஓவாப் புகழ்⋆
பலதேவன் என்னும்⋆
தன் நம்பி ஓடப் பின் கூடச் செல்வான்⋆
தளர்நடை நடவானோ (5)

ஒரு காலில் சங்கொரு காலில் சக்கரம்⋆
உள்ளடி பொறித்தமைந்த⋆
இரு காலும் கொண்டங்கங்கெழுதினாற் போல்⋆
இலச்சினை பட நடந்து⋆
பெருகா நின்ற இன்ப வெள்ளத்தின் மேல்⋆
பின்னையும் பெய்து பெய்து⋆
தரு கார்க் கடல் வண்ணன் காமர் தாதை⋆
தளர்நடை நடவானோ (6)

படர் பங்கய மலர் வாய் நெகிழப்⋆
பனி படு சிறுதுளி போல்⋆
இடங்கொண்ட செவ்வாய் ஊறி ஊறி⋆
இற்றிற்று வீழ நின்று⋆
கடுஞ்சேக் கழுத்தின் மணிக்குரல் போல்⋆
உடை மணி கணகணென⋆

தடந் தாளிணை கொண்டு சார்ங்கபாணி⋆
    தளர்நடை நடவானோ (7)

பக்கம் கருஞ்சிறுப்பாறை மீதே⋆
    அருவிகள் பகர்ந்தனைய⋆
அக்குவடம் இழிந்தேறித் தாழ⋆
    அணி அல்குல் புடை பெயர⋆
மக்கள் உலகினில் பெய்தறியா⋆
    மணிக் குழவி உருவின்⋆
தக்க மா மணிவண்ணன் வாசுதேவன்⋆
    தளர்நடை நடவானோ (8)

வெண் புழுதி மேல் பெய்து கொண்டளைந்ததோர்⋆
    வேழத்தின் கருங்கன்று போல்⋆
தெண் புழுதியாடித் திரிவிக்கிரமன்⋆
    சிறு புகர்பட வியர்த்து⋆
ஒண் போதலர் கமலச் சிறுக்கால்⋆ உறைத்து
    ஒன்றும் நோவாமே⋆
தண் போது கொண்ட தவிசின் மீதே⋆
    தளர்நடை நடவானோ (9)

திரை நீர்ச் சந்திர மண்டலம் போல்⋆
    செங்கண்மால் கேசவன்⋆ தன்
திரு நீர் முகத்துத் துலங்கு சுட்டி⋆
    திகழ்ந்தெங்கும் புடைபெயர⋆
பெரு நீர்த் திரை எழு கங்கையிலும்⋆
    பெரியதோர் தீர்த்த பலம்
தரு நீர்⋆ சிறுச்சண்ணம் துள்ளம் சோரத்⋆
    தளர்நடை நடவானோ (10)

‡ஆயர் குலத்தினில் வந்து தோன்றிய⋆
    அஞ்சன வண்ணன் தன்னைத்⋆
தாயர் மகிழ ஒன்னார் தளரத்⋆
    தளர்நடை நடந்ததனை⋆

வேயர் புகழ் விட்டுசித்தன்⋆ சீரால்
விரித்தன உரைக்க வல்லார்⋆
மாயன் மணிவண்ணன் தாள் பணியும்⋆
மக்களைப் பெறுவர்களே (11)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥